[1980 பிப்ரவரி 4

(ஆ) வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களிடமிருந்து முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் பத்துப் பேர், ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் பதிமூன்று பேர்.

(ஆ) ஆம்.

(இ) முறையீடுகள் அனுப்பிய பின்னர் திரு. எம். தியாகராஜன் என்ற கண்டக்டரைத் தவிர்த்து மீதமுள்ள ஒன்பது நபர்களும் தொழிற் தாவா எழுப்பி, அது தொழிலாளர் அலுவலர், இராமநாதபுரம் அவர்கள் முனபாக பேச்சுவார்த்தையில் உள்ளது.

திரு. த. இராமசாமி : தலைவரவர்களே, எந்தக் குற்றத்திற்காக அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, மேற்கண்ட 10 பேர்களும் பல்வேறு நிர்வாக முறை கேடுகளுக்காகவும், 'எப்.சி. கேஸ்' போன்ற குற்றத்திற்காகவும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள்.

வெலிங்டன் நீர்த் தேக்கம்.

*வினா எண். 35—திரு. மொ. பெரியசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் மங்கலூர் தொகுதியிலுள்ள வெலிங்டன் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தவும் வாய்க்காலை அகலப்படுத்தவும் திட்டம் ஏதும் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) வெலிங்டன் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தும் திட்டத்திற்குப் பதிலாக வாய்க்காலின் நீர் வரத்தினை அதிகப்படுத்தும் திட்டம் தற்போது தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

1980 பிப்ரவரி 4]

(ஆ) ஆய்வு முடிந்து திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்றபின் திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. மொ. பெரியசாமி : தலைவரவர்களே, இந்த வெலிங்டன நீர்த்தேக்கத்தின கீழ் ஏறத்தாழ 32,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் நன்மை அடையும் வகையில் அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு பரிசீலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அரசு தகுந்த நடவடிக்கைகளை உரிய காலத்திலே எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்னத்தடாகம் நீர்த்தேக்கத் திட்டம்.

*வினா எண். 36—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள ''சின்னத்தடாகத்தில்'' ஒரு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) 1976-க்கு முன்னதாகவே இது ஆய்வுக்கு எடுக்கப்பட்டு ஆரம்ப வேலைகளும் நடத்தப்பட்டு இடையில் நின்றுவிட்டதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில் அதன் தொடர்ச்சியாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) இது ஒரு புதிய திட்டம். தற்பொழுது ஆய்வில் உள்ளது. அதன்படி கோவை தாலுகாவிலுள்ள சரவணாம்பட்டி சின்னவேடம்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 512 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமாயின், இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.